டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்

agridoctor.in | 5.09.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 066 - Madurai | Online Edition

# மத்திய அமைச்சர் புத்தொழில் நிறுவனங்களுடன் ஆலோசனை : உயிரி தொழில்நுட்ப முதலீட்டை அதிகரிக்க ’பையோ-நிவேஷ்’ திட்டம் தொடக்கம்

புது தில்லி, செப்.4

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், நாட்டின் இளம் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் முன்னணி முதலீட்டாளர்களுடன் இணைந்து ஒரு சிறப்புக் கூட்டத்தை நடத்தியுள்ளார்.

இந்தியாவில் உயிரி தொழில்நுட்பத் துறையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் நோக்கில், ’பயோ–நிவேஷ்’ என்ற புதிய முதலீட்டுத் தளத்தை அவர் இந்த கூட்டத்தில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார்.

இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாக உயிரி தொழில்நுட்பத் துறை மிகப்பெரிய எழுச்சியைக் கண்டு வருகிறது. இருப்பினும், பல இளம் கண்டுபிடிப்பாளர்களுக்குத் தங்கள் தயாரிப்புகளைச் சந்தைப்படுத்தவும், வணிக ரீதியில் பெரிய அளவில் வெற்றி பெறவும் போதுமான முதலீடுகள் கிடைப்பதில் சில சவால்கள் உள்ளன. இந்த இடைவெளியை முழுமையாக நிரப்பும் வகையில்தான் ’பயோ–நிவேஷ்’ தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இது புத்தாக்க நிறுவனங்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் இடையே ஒரு நேரடிப் பாலமாகச் செயல்படும்.

இந்தக் கூட்டத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து புத்தொழில் நிறுவனங்களின் தலைவர்களும், முன்னணி முதலீட்டாளர்களும் கலந்து கொண்டனர். புதிய கண்டு பிடிப்பு களுக்கு எளிதில் நிதியுதவி பெறுவது, ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டுப் பணிகளை விரைவுபடுத்துவது மற்றும் அரசு வழங்கும் சலுகைகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

அரசு மற்றும் தனியார் துறையின் கூட்டு முயற்சியால் மட்டுமே இந்தியாவின் உயிரி தொழில்நுட்பத் துறையை உலகத் தரத்திற்கு உயர்த்த முடியும் என்று டாக்டர் ஜிதேந்திர சிங் குறிப்பிட்டுள்ளார். இந்த புதிய 'பயோ-நிவேஷ்' முன்முயற்சி மூலம் ஏராளமான புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப் படுவதுடன், சுகாதாரம், விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த பல முக்கியப் பிரச்சனைகளுக்கு அறிவியல் ரீதியான எளிய தீர்வு களைக் காணவும் முடியும் என வலுவாக எதிர்பார்க்கப்படுகிறது.

# +1 மற்றும் +2 வேளாண் கல்வி மாணவர்களுக்கு சிறப்பு திறன் விழிப்புணர்வு பயிற்சி

தூத்துக்குடி, செப்.4

தூத்தக்குடி மாவட்டம், எட்டயபுரம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தில் வேளாண்மை இளங்கலை நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் ஆர்.ஏ.டபிள்யு. இ. (யூபுநிசி) திட்டத்தின் படி கடையநல்லூரில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வேளாண்மை கல்வி பயிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இயற்கை விவசாயம், மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற பயிற்சிகளையும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் மரம் வளர்ப்பு பற்றிய நேரடி செயல் விளக்க பயிற்சியினை எஸ்.ரவிக்குமார், ஆர்.ஹரிதர், ஐ.ராபர்ட்சன், கே.ராஜகுரு, என்.காளிஸ்வரன், எஸ்.கனகராஜ், எஸ்.மணியராசன் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். கல்லூரி மாணவர்கள் தேனீ பெட்டிகளை இலவசமாக பள்ளிக்கு வழங்கினர். நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் பிரிவா தலைமை தாங்கினார். வேளாண்மை ஆசிரியர் கண்ணன் முன்னிலை வகித்தார்.



agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சம்பா நெல் சாகுபடி அறிவிப்பு

திருச்சி, செப்.4

தமிழ்நாடு முதலமைச்சரால் மேட்டூர் அணை 1.09.26-ம் தேதி சம்பா நெல் சாகுபடிக்காக திறந்துவிடப்பட்ட நிலையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து திருச்சிராப்பள்ளி, வேளாண்மை இணை இயக்குநர், மா.சாந்தா மணி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

2026-27 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 49,830 எக்டர் பரப்பளவில் சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது பாசன நீர் நிலையை கருத்தில் கொண்டு விவசாயிகள் அதிக அளவில் நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ள வேண்டும். தற்போதுள்ள சூழ்நிலையில் நீண்ட கால நெல் இரகங்களை சாகுபடி செய்வதை தவிர்த்து நீர் பயன்பாட்டை சிக்கனமாக்கும் வகையில் திருச்சி-3, ஆடுதுறை-54, பிபிடி-5204, கோ-52, கோ-50, கோ-56, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, டிகேஎம்-13, ஐஆர்-20 ஆகிய மத்திய மற்றும் குறுகிய கால இரகங்களை சாகுபடி செய்யுமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.

மேற்கூறிய இரகங்களின் சான்று பெற்ற நெல் விதைகள் மாவட்டத்திலுள்ள அனைத்து வேளாண் விரிவாக்க மையங் களிலும், துணை வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் 436 மெ.டன் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அறிவிக்கை செய்யப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலான நெல் இரகங்களுக்கு ரூ.10/கிலோ மற்றும் 10 ஆண்டு களுக்கு குறைவான நெல் இரகங்களுக்கு ரூ.20/கிலோவும் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் தங்கள் அருகாமையில் உள்ள வேளாண் விரிவாக்க மைங்கள் / துணை வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பயன் பெறுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மா.சாந்தாமணி கேட்டுக் கொண்டுள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

31. ஹாட் அண்ட் சவர் சூப்

தேவையான பொருட்கள்

கேரட் — ¼ கப்
முட்டைக்கோஸ் — ¼ கப்
குடைமிளகாய் — ¼ கப்
சோயா சாஸ் — 1 டீஸ்பூன்
வினிகர் — 1 டீஸ்பூன்
சோள மாவு — 1 டீஸ்பூன்
உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

காய்கறிகளை வேக வைத்து சாஸ், வினிகர் சேர்க்கவும். சோள மாவு கரைசலை சேர்த்து கெட்டியாகும் வரை சமைக்கவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம் – பூச்சிகள் மற்றும் களைகளின் உயிரியல் கட்டுப்பாடு – பழங்குடியினர் உப திட்ட நிகழ்ச்சி



கோயம்புத்தூர், செப்.4

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர்ப்பாதுகாப்பு மையத்தில் உள்ள வேளாண் பூச்சியியல் துறையில், 'பூச்சிகள் மற்றும் களைகளின் உயிரியல் கட்டுப்பாடு' குறித்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, கோயம்புத்தூர் மாவட்டம், பில்லூரில் 25.08.26 அன்று முதலாவது 'பழங்குடியினர் உப திட்ட நிகழ்ச்சி' நடத்தப் பட்டது. இந்நிகழ்ச்சியில் 30 பயனாளிகள் கலந்து கொண்டனர்.

வேளாண் பூச்சியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் ப.சா.சண்முகம் வரவேற்புரை நிகழ்த்தி, நிகழ்ச்சியின் நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். வேளாண் பூச்சியியல் துறைப் பேராசிரியரும் தலைவருமான முனைவர் மா.முருகன், பூச்சிக்கொல்லிகளின் கட்டுப்பாடற்ற பயன்பாட்டால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும், பூச்சி மேலாண்மையில் சுற்றுச் சூழலுக்கு உகந்த உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைக் கையாள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

பூச்சியியல் துறைப் பேராசிரியரும் நிகழ்ச்சி ஒருங்கிணைப் பாளருமான முனைவர் சு.ஜெயராணி, உயிரியல் முறை சார்ந்த பூச்சி மேலாண்மையின் (biorational pest management) அவசியத்தை எடுத்துரைத்தார். அத்துடன், நிலையான பயிர் பாதுகாப்பிற்காக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உயிரியல் முறை சார்ந்த இடுபொருட்களைத் திறம்படப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, வேளாண் பூச்சியியல் துறைப் பேராசிரியர்களும், தலைவரும் இணைந்து, 30 விவசாயிகளுக்கு தலா ரூ.3,500 மதிப்புள்ள உயிரியல் முறை சார்ந்த இடுபொருட்களை வழங்கினர். ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கப்பட்ட தொகுப்பில் உளுந்து விதைகள் (4 கிலோ), கத்தரி, தக்காளி மற்றும் சிவப்புத் தண்டுக்கீரை விதைகள் (தலா ஒரு பாக்கெட்), ரைசோபியம் கல்ச்சர் (1 கிலோ), டிரைக்கோடெர்மா விரிடி (1 கிலோ), பயறு வொண்டர் (1 கிலோ), டிரைக்கோகிராமா கைலோனிஸ் (6 சிசி) மற்றும் கிரைசோபிட் முட்டைகள் (3,900 எண்ணிக்கை) ஆகியவை அடங்கியிருந்தன. இளநிலை ஆராய்ச்சியாளர் ஈ. மகாலட்சுமி கீதா நன்றியுரை வழங்க இந்நிகழ்ச்சி நிறைவடைந்தது.

## பள்ளிப் புதுப்பட்டு கிராமத்தில் ஆட்மா திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயிற்சி




விழுப்புரம், செப்.4

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், பள்ளிப் புதுப்பட்டு கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் Dr.பாலசுப்பிரமணியனின் வழிகாட்டுதலின்படி வேளாண்மை துறையில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் சரிவிகித உர பயன்பாடு பயிற்சி நடத்தப்பட்டது. பயிற்சிக்கு துணை வேளாண் அலுவலர் தமிழ்ச் செல்வன், முன்னிலை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேன்மொழி வரவேற்புரை அளித்தார். திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில் நுட்ப வல்லுனர் முனைவர் செந்தமிழ், வேளாண்மையில் அங்கக உர பயன்பாடு உயிர் உரங்களின் முக்கியத்துவம் பயிர் சுழற்சியில் பயறு வகை பயிர்களின் சேர்க்கை பஞ்சகாவியா தெளிப்பின் அவசியம் இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை ஆகிய அம்சங்களை பயன்படுத்தி சாகுபடி செலவை குறைக்குமாறு அறிவுறுத்தினார். மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். உதவி வேளாண் அலுவலர் சதஸ்ரீ வேளாண் திட்டப் பணிகள் வேளாண் மானியங்கள் பற்றி விளக்கமாக கூற, உதவி தொழில்நுட்ப மேலாளர் வீரமணி நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் அருள் பாபு செய்திருந்தார்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# நதிகளுக்கு புத்துயிரூட்டும் தினத்தை முன்னிட்டு காவேரி கூக்குரல் சார்பாக நாளை மரம் நடும் திருவிழா



செப்டம்பர் 3-ஆம் தேதி நதிகளுக்கு புத்துயிரூட்டும் தினம் என ஈ ஷா சார்பில் ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதையொட்டி, தமிழ்நாடு முழுவதும் ஈ ஷா தன்னார்வலர்கள், காவேரி கூக்குரல் பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் இணைந்து விவசாய நிலங்களில் மரம் நடும் நிகழ்வுகளை மேற்கொண்டனர். இதன் ஒரு பகுதியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட 131 விவசாய நிலங்களில், 554 ஏக்கர் பரப்பளவில் 1.2 லட்சத்திற்கும் மேற்பட்ட டிம்பர் மரக்கன்றுகள் நடப்பட்டன.

**நதிகளுக்கு புத்துயிரூட்டும் பணியில் காவேரி கூக்குரல்**

நதிகளுக்கு புத்துயிரூட்டுவதோடு, விவசாயிகளின் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்கில் காவேரி கூக்குரல் இயக்கம் செயல்பட்டு வருகிறது. மரம் சார்ந்த விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம் விவசாய நிலங்களில் மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன், விவசாயிகளுக்கு நீண்டகால பொருளாதாரப் பலன்களை உருவாக்குவதிலும் காவேரி கூக்குரல் கவனம் செலுத்தி வருகிறது.

இதுவரை ஈ ஷாவின் பல்வேறு திட்டங்களின் மூலம் தோராயமாக 13.3 கோடி மரங்கள் நடப்பட்டுள்ளன. மேலும், தமிழகத்தின் அனைத்து கிராமங்களிலும் அரச மரங்களை நடும் நோக்கில், பேரூர் மற்றும் தருமை ஆதீனங்களுடன் இணைந்து அரச மரக்கன்றுகள் நடும் பணியையும் காவேரி கூக்குரல் செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு தமிழ்நாட்டில் மட்டும் 1.20 கோடி மரங்கள் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 35,70,000 மரங்கள் நடப்பட்டுள்ளன.

**விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு வழிகாட்டும் மரம் சார்ந்த விவசாயம்**

தேக்கு, மலைவேம்பு, கருமருது, வேங்கை, மஞ்சள் கடம்பு, சந்தனம், செஞ்சந்தனம், குமிழ், மகாகனி உள்ளிட்ட விலை மதிப்புமிக்க 20 வகையான டிம்பர் மரங்கள் தேர்வு செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இம்மரங்களை விவசாய நிலங்களில் வளர்ப்பதன் மூலம், விவசாயிகளுக்கு நீண்ட காலத்தில் குறிப்பிடத்தக்க வருமானம் கிடைக்கும் வாய்ப்பு உருவாகிறது. மரங்கள் வளர்ந்து வரும் காலகட்டத்திலும், அவற்றுக்கு இடையே ஊடுபயிர்களைச் சாகுபடி செய்வதன் மூலம் கூடுதல் வருமானம் பெறுவதற்கான வழிமுறைகளையும் காவேரி கூக்குரல் வழங்கி வருகிறது. குறிப்பாக, சமவெளிப் பகுதிகளில் வளரக்கூடிய கரிமுண்டா ரக மிளகு சாகுபடியை மரங்களுடன் இணைத்து மேற்கொள்வதன் மூலம், பல விவசாயிகள் தொடர் வருமானம் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

**தயார் நிலையில் மரக்கன்றுகள்**

தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் ஈஷா நர்சரிகளில் விவசாயிகளுக்குத் தேவையான மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், குறைந்த விலையில் ஒரு மரக்கன்று வெறும் ரூ.5-க்கு வழங்கப்படுகிறது. மேலும், வரும் மழைக்காலத்தில் விவசாயிகள் மரக்கன்றுகளை நடவு செய்வதற்கு ஏதுவாக, தேவையான அளவு மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு தற்போது விநியோகத்திற்குத் தயாராக உள்ளன.

**இலவச மரம் சார்ந்த விவசாயக் கருத்தரங்கு**

மர விவசாயிகளுக்கு தொழில்நுட்ப விளக்கங்களை வழங்கும் வகையில், மரம் சார்ந்த விவசாயம் குறித்த மண்டல கருத்தரங்குகள் கன்னியாகுமரி, திருவாரூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், மதுரை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராணிப்பேட்டை, சிவகங்கை, திருப்பத்தூர், திருச்சி, திருநெல்வேலி, தேனி, பெரம்பலூர், தர்மபுரி மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் வரும் செப்டம்பர் 6-ஆம் தேதி (ஞாயிறு) நடைபெற உள்ளன. இக்கருத்தரங்குகளில் மரம் சார்ந்த விவசாயத்தின் முக்கியத்துவம், மண்ணுக்கும் நிலத்தின் தன்மைக்கும் ஏற்ற மரங்களைத் தேர்வு செய்தல், மரக்கன்றுகளை நடவு செய்தல், மரங்களைப் பராமரித்தல் மற்றும் ஊடுபயிர் சாகுபடி உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கங்கள் வழங்கப்பட உள்ளன.

கருத்தரங்கில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் 94425 90079, 94425 90081 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம். மரக்கன்றுகள் தேவைப்படுவோர் மற்றும் மரம் சார்ந்த விவசாயம் குறித்த இலவச ஆலோசனைகளைப் பெற விரும்பும் விவசாயிகள், காவேரி கூக்குரல் பொது எண் : 80009 80009 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# மண்ணில் உள்ள நுண்ணுயிர் பாக்டீரியாக்கள், செயற்கை உரங்களின் தேவையைக் குறைத்துக் கொண்டே விவசாயிகள் பயிர்களை வளர்க்க உதவினால் எப்படி இருக்கும்?

திருப்பூர், செப்.4

பிரேசில் நாட்டின் வேளாண் ஆராய்ச்சி நிறுவனமான Embrapa–வில் மூத்த ஆராய்ச்சியாளராகவும், மண் நுண்ணுயிரியல் நிபுணராகவும் இருக்கும் டாக்டர் மரியாஞ்சலா ஹூங்ரியாவின் முன்னோடியான ஆய்வுப் பணியின் அடிப்படைக் கருத்து இது தான். வெப்பமண்டல மண் நுண்ணுயிரியல் குறித்து 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஆய்வு செய்த டாக்டர் ஹூங்ரியா, இயற்கையாக மண்ணில் காணப்படும் Rhizobium மற்றும் Azospirillum brasilense உள்ளிட்ட பாக்டீரியா–ாக்களைப் பயன் படுத்தி உயிரியல் நுண்ணுயிர் கலவைகளை (biological inoculants) உருவாக்கி மேம்படுத்தினார்.

இந்த பயனுள்ள நுண்ணுயிரிகள் தாவரங்களின் வேர்களுடன் இணைந்து செயல்பட்டு, சோயாபீன், அவரை வகைகள், சோளம் மற்றும் கோதுமை போன்ற பயிர்களுக்கு காற்றில் உள்ள நைட்ரஜனைப் பயன்படுத்த உதவுகின்றன. இதன் மூலம் செயற்கை நைட்ரஜன் உரங்களின் மீது விவசாயிகள் வைத்திருக்கும் சார்பை குறைக்க முடியும். இதன் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அவரது ஆய்வுப் பணி களுடன் தொடர்புடைய புள்ளி விவரங்களின்படி, பிரேசிலில் கோடிக் கணக்கான ஹெக்டேர் விவசாய நிலங்களில் உயிரியல் நுண்ணுயிர் கலவைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் இறக்குமதி செய்யப்படும் ரசாயன உரங்களுக்கான செலவில் விவசாயிகள் ஆண்டுதோறும் சுமார் 25 பில்லியன் அமெரிக்க டாலர்களை சேமிப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த உயிரியல் சிகிச்சைகளின் செலவு ஒரு ஹெக்டேருக்கு சுமார் 2 முதல் 5 அமெரிக்க டாலர்கள் மட்டுமே இருக்கக்கூடும். இதனால் பல விவசாயிகளுக்கு இது மலிவான மாற்று வழியாக அமைகிறது. விவசாயத்தைத் தாண்டியும் இந்தத் தொழில் நுட்பம் சுற்றுச்சூழலுக்கு நன்மைகளை வழங்குகிறது. ஆண்டுதோறும் சுமார் 230 மில்லியன் மெட்ரிக் டன்னுக்கு சமமான பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தைத் தடுக்க உதவுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில், நீர்நிலைகளில் கலக்கும்

அதிகப்படியான நைட்ரஜனையும் குறைக்க உதவுகிறது.

2025 மே மாதத்தில், நிலைத்தன்மை கொண்ட வேளாண்மைக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்காக, World Food Prize Foundation டாக்டர் ஹுங்ரியாவை 2025 World Food Prize Laureate ஆக அறிவித்தது.

மண்ணில் உள்ள பாக்டீரியாக்கள் போன்ற மிகச் சிறிய உயிரினங்கள்கூட விவசாயம், விவசாயிகள் மற்றும் சுற்றுச்சூழலில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை அவரது பணி எடுத்துக்காட்டுகிறது.



# தட்டான் பூச்சி தாழப்பறந்தால்......



பொதுவாக தட்டான்கள் (DRAGAN FLY) நீர் நிலைகளை (கண்மாய், குளம், குட்டை) சார்ந்தே வாழும் பூச்சி இன மாகும். பெண் தட்டான்கள் குளம், குட்டை, கால்வாய் போன்ற நீர் நிலைகள் அல்லது நீர் வாழ் செடிகளில் முட்டையிடும். இந்த முட்டை களிலிருந்து, வெளிவரும் இளம் தட்டான்கள் சில நாட்கள் கூட்டு புழுவாக நீருக்குள் வாழும். அப்போது இவை நீரில், இருந்து கொண்டு மனிதர்களுக்கு பல்வேறு நோய்களை பரப்பும் (மலேரியா, டெங்கு) கொசு மற்றும் இளம் புழுக்களை வேட்டை யாடி அழிக்கும். தட்டான் பூச்சிகள் இயற்கையாக கொசுக்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு கட்டத்தில் இவை முதிர்ந்த தட்டான் பூச்சியாக மாறி நீரிலிருந்து, வெளிவந்து பறக்க தொடங்கும். மீண்டும் இனப்பெருக்கம் செய்து முட்டையிடுகின்றன. தட்டான்கள் எந்த இடத்தில் அதிகமாக இருக்கிறதோ அந்த இடம் ஒரு நல்ல சுற்றுச்சூழல் இடமாக கருதப்படும்.

**தட்டான் தாழப்பறந்தால் என்ன நிகழ்வு நடக்கும் என விவசாயிகள் நினைக்கிறார்கள்?**

ஒரு இடத்தில் வெப்பநிலை தணிந்து, மழை வரும் முன் வளிமண்டலத்தில் ஈரப்பதம் அதிகரிக்கும். அப்போது பல சிறிய பூச்சிகள் தங்களுடைய இருப்பிடத்தை விட்டு வெளியே வந்து பார்க்க தொடங்கும். அப்போது அவற்றை உணவாக உட் கொள்ளும் தட்டான்கள் அவற்றின் வருகைக்காக காத்திருக்கும். இந்த பருவ நிலையில் பூச்சிகளை பிடிக்க தாழ்வாக பறக்கும். இதையே நம்முடைய முன்னோர்கள் மழை பொழிவிற்கான அறிகுறியாக கணித்தனர். இதன் காரணமாக தான் 'தட்டான் தாழப்பறந்தால் மழை' என்ற பழமொழி உருவானது போல.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு மேற்கொள்ள ஆர்வமுள்ளவர்களுக்கு அழைப்பு

புதுக்கோட்டை, செப்.4

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையினருடன் இணைந்து மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு (Digital Crop Survey) 2026 பணிகளை துல்லியமாக மேற்கொள்ள ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் தன்னார்வலர்களாக பதிவு செய்து பணியாற்ற வட்டார வேளாண் உதவி இயக்குநர் அழைப்பு விடுத்துள்ளார்.

மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு என்பது சாகுபடி செய்யப்பட்டுள்ள விவசாயிகளின் பயிர் விவரங்கள் நேரடியாக களத்திற்கு சென்று சேகரிக்கப்பட்டு மொத்த பயிர் சாகுபடி பரப்பினை துல்லியமாக மதிப்பீடு செய்யவும் உதவுகிறது. இக்கணக்கெடுப்பு பணியானது காரீப், இராபி மற்றும் கோடை என வருடத்திற்கு மூன்று பருவங்களில் மேற்கொள்ளப்படுகிறது. இப்பணி மேற்கொள்ள இணைய வசதியுள்ள ஆன்ட்ராய்ட் போன் அவசியமானதாகும். மேலும், இப்பணி மேற்கொள்ளும் தன்னார்வலர்களுக்கு, பதிவு மேற்கொள்ளும் உட்பிரிவு எண் நடப்பு தரிசு நிலமாக இருப்பின் ஒரு உட்பிரிவிற்கு ரூ.3, ஒற்றை பயிர் சாகுபடியாக இருப்பின் ஒரு உட்பிரிவிற்கு ரூ.5, ஒரே உட்பிரிவு எண்ணில் கூடுதல் பயிர் பதிவு செய்யும் பட்சத்தில் ஒரு பயிருக்கு ரூ.2 வீதம் ஊக்கத்தொகையானது நேரடியாக தன்னார்வலர்களின் வங்கிக் கணக்கிற்க்கு வழங்கப்பட உள்ளது.

எனவே, நடப்பு காரீப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் விவரங்களை மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு மூலம் நேரடியாக களத்தில் சென்று சேகரிக்க ஆர்வமுள்ள தன்னார் வலர்கள் உழவர் செயலி அல்லது வேளாண்மை விரிவாக்க மையம், அறந்தாங்கி / உதவி வேளாண்மை அலுவலரை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்யும் தன்னார்வலர்களுக்கு இப்பணி மேற்கொள்வது தொடர்பான பயிற்சிகள் விரிவாக வழங்கப்படும் என வேளாண் உதவி இயக்குநர் சு.ப.பத்மபிரியா தெரிவித்துள்ளார்.

தொடர்புக்கு தி.பாக்யா, வேளாண்மை அலுவலர், 63829 69049.

# விவசாயிகளுக்கு உயிர் வாயு குறித்த விழிப்புணர்வு



திருச்சி, செப்.4

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், செம்பறை கிராமத்தில் காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியைச் சேர்ந்த மாணவிகள், ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டம் மற்றும் கிராமத் தங்கல் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உயிர் வாயு தயாரிப்பு மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மாணவிகள் அருந்ததி, ஹஸ்வத்தா பத்மராஜ், கவிதாஞ்சலி, ஹர்ஷினி, ஹரிணி மற்றும் மௌனிகா ஆகியோர் கலந்து கொண்டு உயிர் வாயுவின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர்.

மாட்டுச் சாணம், கால்நடைக் கழிவுகள் மற்றும் பிற மக்கும் கரிமக் கழிவுகளை ஆக்சிஜன் இல்லாத நிலையில் நுண்ணுயிரிகளின் செயல்பாட்டின் மூலம் சிதைவடையச் செய்து உயிர்வாயு தயாரிக்கப்படும் முறை விளக்கப்பட்டது. மேலும், உயிர்வாயு கலவைத் தொட்டி, செரிமானத் தொட்டி மற்றும் வாயு சேமிப்பு அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்தும் எடுத்துரைக் கப்பட்டது. உயிர் வாயுவை சமையல் மற்றும் பிற ஆற்றல் தேவை களுக்குப் பயன்படுத்தலாம் என்றும், உயிர் வாயு உற்பத்திக்குப் பிறகு கிடைக்கும் செரிமானக் கழிவை சிறந்த கரிம உரமாகப் பயன்படுத்தலாம் என்றும் விளக்கினர்.

உயிர் வாயு பயன்பாட்டின் மூலம் கால்நடைக் கழிவுகளை முறையாக மேலாண்மை செய்தல், எரிபொருள் செலவைக் குறைத்தல், கரிம உரம் பெறுதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் போன்ற நன்மைகள் கிடைக்கும் என மாணவிகள் வலியுறுத்தினர். இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகள் பண்ணைக் கழிவுகளை பயனுள்ள வகையில் மறுசுழற்சி செய்வதன் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 · IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW · isha · POWERGRID · BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# உயர் மதிப்புள்ள வளர்ந்து வரும் பயிர்கள் குறித்த கண்டுணர்வு சுற்றுலா




கிருஷ்ணகிரி, செப்.4

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் (அட்மா) திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டம், தடியங்குடிசையில் அமைந்துள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்திற்கு நிலையான மலை விவசாயத்திற்கான உயர் மதிப்புள்ள வளர்ந்து வரும் பயிர்கள் குறித்த கண்டுணர்வு சுற்றுலாவிற்கு தளி வட்டாரத்திற்கு உட்பட்ட உனிசேநத்தம், கக்தாசம், அன்னியாளம் விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர்.

அங்கு முனைவர் முத்துராமலிங்கம், பேராசிரியர் மற்றும் தலைவர், மித வெப்பமண்டல தோட்டக்கலை பயிர்களில் மசாலாப் பொருட்கள் மற்றும் தோட்டப் பயிர்களான மிளகு, ஏலக்காய், மலை பூண்டு, இஞ்சி சாகுபடி தொழில்நுட்ப முறைகள் குறித்தும், பழப் பயிர்களான அவகேடோ, மலை வாழை, மாண்டரின் ஆரஞ்சு சாகுபடி முறைகள் குறித்தும் மருத்துவம் மற்றும் நறுமணத் தாவரங்களான ரோஸ்மேரி, ஜெரானியம், துளசி சாகுபடி முறைகள் குறித்தும் வெட்டுமலர்கள் மற்றும் அலங்கார செடிகளானக ார்னே - ன், ஜெர்பரா, லில்லியம், அந்தூரியம் சாகுபடி முறைகள் குறித்தும், தரமான பண்ணை உருவாக்குதல் மற்றும் பாதுகாத்தல், அங்ககக் கழிவுகள் மற்றும் பண்ணைக் கழிவுகளை மேலாண்மை செய்தல், மண் பரிசோதனை போன்றவை பற்றி விவசாயிகளுக்கு விரிவாக கூறினார். அனிதா, பேராசிரியர் (வேளாண் நுண்ணுயிரியல்) ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரிக்கும் வழி முறைகளான கலவை தயாரித்தல், சத்துகளை சேர்த்தல், நுண்ணுயிரிகளை சேர்த்தல், மூடாக்கு போடுதல் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக கூறினார்.மேலும் பஞ்சகாவியா, ஜீவாமிருதம் தயாரிப்பு பற்றியும், குப்பை எருக்களை எளிதில் மக்க வகைக்கும் தொழில் நுட்ப முறைகளான வேஸ்ட் டிகம்போசர் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

ஜெயகுமார், துணை இயக்குநர், மண்டல காபி ஆராய்ச்சி நிலையம், தாண்டிக்குடி, மண்டல காபி ஆராய்ச்சி நிலையத்தின் முக்கிய செயல்பாடுகளான வேளாண் ஆராய்ச்சி, பயிர் மேம்பாடு, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் விரிவாக்கம் பற்றியும் காபி பயிரில் சாகுபடி தொழில்நுட்ப முறைகள், ஊடுபயிர் சாகுபடி தொழில்நுட்ப முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக கூறினார்.

ஆறுமுகம், உதவி விரிவாக்க அலுவலர், காபி இரகங்களான அராபிகா, ரொபாஸ்டா, மண்ணின் கார அமிலத் தன்மை, விதை, நாற்றாங்கால் தயாரித்தல், நிழல் தரும் மரங்களை நடவு செய்தல், இடைவெளி, நீர் மேலாண்மை, உர மேலாண்மை குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடு களை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ர.சிந்தனா செய்திருந்தார்.

# அறுவடைக்கு பின் மதிப்பு கூட்டுதல் குறித்த பயிற்சி



சேலம், செப்.4

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் ஓதியத்தூர் கிராமத்தில் அறுவடைக்கு பின் செய்நேர்த்தி மதிப்பு கூட்டுதல் பயிற்சி நடைபெற்றது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் வரவேற்று அட்மா திட்டம் மற்றும் உழவன் செயலி பற்றி கூறினார். வேளாண்மை உதவி இயக்குநர் மோகன சரிதா கலந்து கொண்டு விவசாய அடையாள எண் அவசியத்தையும் நன்மைகளும் எடுத்துரைத்தார். சிறப்பு அழைப்பாளர் வைரம், பாரம்பர்யா அங்காடி நிறுவனர் கலந்து கொண்டு அறுவடை பின் நேர்த்தி காய்கறி பழங்களை சாறு மற்றும் ஜெல்லி தாயரித்தல் மற்றும் பேக்கிங் முறைகள் தரம் பிரித்தல் சிறுதானிங் களை உணவு பொருட்கள் மதிப்பு கூட்டி விற்பதை பற்றி விரிவாக எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் சுரேஷ் கலந்து கொண்டு துறை சார்ந்த திட்டங்களை எடுத்து கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சங்கர் நன்றி கூறினார்.

# பயறுவகை பயிர்களில் உற்பத்தி தன்னிறைவு பற்றிய ஒரு நாள் பயிற்சி



திருச்சி, செப்.4

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரம்பூர் வட்டாரத்தில் உள்ள அரசங்குடி கிராம விவசாயிகளுக்கு பயறுவகை பயிர்களில் உற்பத்தி தன்னிறைவு பற்றி ஒருநாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் சுகன்யா தேவி தலைமை வகித்து சம்பா முன்பருவ சாகுபடி தொழில்நுட்பங்கள், வேளாண்மை விரிவாக்கம் மையத்தில் உள்ள இடுப்பொருட்களின் விவரங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும், வறட்சி காலங்களில் வீரியமான விதை முளைப்பதற்கு கடைபிடிக்க வேண்டிய விதை நேர்த்தி முறைகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறி செயல் விளக்கம் செய்து காண்பித்தார். இதில் உயிர் உர தர கட்டுப்பாட்டு ஆய்வகம் வேளாண்மை அலுவலர் ரோகித் கலந்து கொண்டு பயறு வகைகளில் உற்பத்தியை அதிகரித்து இறக்குமதியை குறைத்து தன்னிறைவு அடையும் நோக்கில் மத்திய அரசு பயிறு வகைகளில் தன்னிறைவு இயக்கம் என்ற சிறப்பு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது எனவும், இத்திட்டத்தில் அதிக மகசூல், பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு திறன்,வறட்சி உள்ளிட்ட காலநிலை மாற்றங்களை தாங்கும் திறன் கொண்ட புதிய ரக விதைகளை விவசாயிகளுக்கு வழங்கவும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை குறைத்து பருப்பு வகைகளை மதிப்பு கூட்டு வதற்காக நாடு முழுவதும் 10000 பதப்படுத்தும் கட்டிடங்கள் மற்றும் பேக்கேஜிங் அலகுகள் அமைக்க இலக்கு நிர்ணயிக் கப்பட்டுள்ளது எனவும் பயறு வகையில் உற்பத்தி தன்னிறைவு, விவசாயிகளின் வருமான உயர்வு,ஊட்டச்சத்து பாதுகாப்பு போன்ற மூன்று முக்கிய இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு திட்டம் செயல்படுத்தப்படுவதால் வேளாண்மை துறையில் இது முக்கிய முன்னேற்றமாக அமையும் என கூறினார்.

இறுதியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுபாதேவி அட்மா திட்ட செயல்பாடுகள் பற்றி எடுத்து கூறி நன்றி உரையாற்றி பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

# விவசாயிகள் உயிர்ம சான்று பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து பயிற்சி

புதுக்கோட்டை, செப்.4

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரம், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் வாயிலாக செயல் படுத்தப்படும் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் உயிர்மச்சான்று வழிமுறைகள் குறித்த பயிற்சியானது வீரப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது.






இப்பயிற்சிக்கு அன்னவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியழகன் தலைமை வகித்து உயிர்ம சான்று பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும், உயிர்ம முறையில் சாகுபடி செய்வதில் உயிர் உரங்கள், உயிரியல் காரணிகளின் முக்கியத்துவங்கள் பயன்படுத்தும் முறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு பயிற்சியினை துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து இப்பயிற்சிக்கு புதுக்கோட்டை விதைச்சான்று அலுவலர் இளஞ்செழியன், விதை என்றால் என்ன?, நல்விதை எப்படி இருக்க வேண்டும்?, விதைகள் வாங்கும்பொழுது கவனிக்கப்பட வேண்டிய நடைமுறைகள், விதைகளின் குணங்கள், விதைகள் தேர்வு, விதை நெல் தரம் பிரித்தல், நெல் விதை உற்பத்திக்கு ஏற்ற இரகங்கள், பருவங்கள், விதை முளைப்புத்திறன், விதை தூய்மை கணக்கிடும் முறைகள், விதைப்பு அறிக்கை செய்தல், சான்று கட்டணம், வயல் ஆய்வுக்கட்டணம் மற்றும் கலவன் நீக்குதல் விதைப்பண்ணை அமைக்கும் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் மற்றும் அங்ககப் பண்ணையம் அமைக்கும் போது விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய முக்கிய வழிமுறைகள் குறித்தும் உயிர்ம வேளாண்மையில் பஞ்சகாவ்யா, மீன் அமிலம், தாவர பூச்சி விரட்டிகள் தயாரிக்கும் வழிமுறைகள் அதனை பயன்படுத்தும் முறைகள் குறித்து விரிவாக பயிற்சியளித்து இப்பயிற்சியில் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

முன்னதாக அன்னவாசல் வட்டார வேளாண்மை அலுவலர் ர.கௌசல்யா, வரவேற்புரையாற்றி வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள் குறித்தும் நுண்ணீர் பாசனத்தின் முக்கியத்துவங்கள், மானியங்கள், மானியம் பெற தேவைப்படும் ஆவணங்கள் குறித்தும் விவசாயி களுக்கு விளக்கமளித்தார். இப்பயிற்சியில் விதை பண்ணை அமைத்து மற்றும் அமைக்கப்பட ஆர்வமுள்ள 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். பயிற்சி நிறைவில் சி.ரவி ராஜன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் நன்றியுரையாற்றினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் சக்திவேல், உதவி விதை அலுவலர்கள் கண்ணன், மாரிதேவன், ஆகியோர் ஏற்பாடுகள் செய்து கலந்து கொண்டார்கள்.

# குறுங்குளத்தில் கரும்பு வயலில் டிரைக்கோகார்டு பயன்பாடு குறித்த செயல்விளக்கம்



தஞ்சாவூர், செப்.4

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த B.Sc. (ஹானர்ஸ்) வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் தனுஷ்யா, கீர்த்தனா, ஜீவிதா, பிரதீபா, அகல்யா மற்றும் ஷப்னா ஆகியோர், தங்களது கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சியின் (RAWE) ஒரு பகுதியாக, தஞ்சாவூர் மாவட்டம் குறுங்குளத்தில் கரும்பு வயலில் டிரைக்கோகார்டு (Trichocard) பயன்பாடு குறித்த செயல்விளக்கத்தை விவசாயிகளுக்கு வழங்கினர்.

கரும்புப் பயிரைத் தாக்கும் கரும்புத் தண்டு துளைப்பான் (Early Shoot Borer), இடைக்கணுத் துளைப்பான் (Internode Borer) மற்றும் மேல் தண்டு துளைப்பான் (Top Borer) போன்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் Trichogramma ஒட்டுண்ணிகளின் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. டிரைக்கோகார்டில் உள்ள Trichogramma முட்டை ஒட்டுண்ணிகள் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் முட்டைகளில் ஒட்டுண்ணியாக செயல்பட்டு, அவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் விதம் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், வயலில் டிரைக்கோகார்டை சரியான இடைவெளியில் பொருத்தும் முறை, பொருத்துவதற்கான சரியான நேரம் மற்றும் கார்டுகளை கையாளும் போது மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நேரடியாகச் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, இயற்கை எதிரிகளைப் பாதுகாக்கும் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது.

இச்செயல்விளக்கத்தின் மூலம் கரும்பில் பூச்சித் தாக்குதலை சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான முறையில் கட்டுப்படுத்துவதற்கான உயிரியல் பூச்சி மேலாண்மை முறையான டிரைக்கோகார்டின் பயன்பாடு மற்றும் அதன் நன்மைகள் குறித்து விவசாயிகள் அறிந்து கொண்டனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 CML-5400119810

IS 9537 CML-5400121694

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# இயற்கை வழி வேளாண்மையில் பயிர் ஊக்கிகளின் பங்கு

பயிர் ஊக்கிகள் பயிர்களிலேயே இயற்கையில் உற்பத்தியாகும். பயிர் ஊக்கிகளை, வளர்ச்சி ஊக்கி என்று கூட சொல்லலாம். பயிர்களின் ஒரு பாகத்தில் குறிப்பாக வளரும் நுனித் தண்டுகள், வேர் நுனிகள் மற்றும் குருத்துகளின் உற்பத்தியாகும் பயிர் ஊக்கிகள் தேவையான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு வினையியல் (உருவ மாற்றம்) மாற்றங்களை ஏற்படுத்தும். இவ்வாறு பயிரின் பல பாகங்களில் பயிர் ஊக்கிகள் உற்பத்தி செய்யப்பட்டாலும், சில சமயங்களில் குறிப்பிட்ட அளவு கிடைக்காமல் போக வாய்ப்பு உள்ளது. எனவே தான் பயிர் வளர்ச்சி ஊக்கிகளை உற்பத்தி செய்து தெளிக்க வேண்டிய சு+ழ்நிலை உள்ளது. ரசாயனங்களைக் கொண்டு பயிர் ஊக்கிகளை உற்பத்தி செய்து தருகின்றனர். பயிர் ஊக்கிகளை பயிர் மேல் தெளிக்கும் போது, அது பயிரின் வளர்ச்சியை தூண்டிப் பயிரை நன்கு வளரச் செய்கிறது.

### இயற்கை பயிர் ஊக்கிகள்

இயற்கையில் செடிகளில் உருவாகும் பயிர் ஊக்கிகளை பிரித்து எடுத்து பயிர்களுக்கு தெளிப்பது தான் சிறந்தது. நம் மண்ணில் இருக்கின்ற பல்வேறு வகையான இயற்கை உரங்கள் நன்கு மக்கி, மக்குச் சத்ததாக மண்ணில் சேமிக்கப்படுகிறது. இந்த மக்குச் சத்தை உற்பத்தி செய்கிற கிரியோட்டினன், இண்டோல் அசிடிக் அமிலம் போன்ற வளர்ச்சி ஊக்கிகளால், பயிர் வளர்ச்சி ஊக்குவிக்கப் படுகிறது. இது தவிர வேர்களில் இருந்து வெளிவந்து மக்குச் சத்துடன் இணைந்து பயிரின் வளர்ச்சிக்கு உதவுகிறது. எனவே, இயற்கை எருக்களை மட்டுமே, மண்ணில் இடுவதால் பயிர் வளர்ச்சி ஊக்கிகள் தேவையான அளவுக்கு உற்பத்தியாகி செயல் படும் என்பது அறிவியல் பூர்வமான உண்மை.

பயிர்களில் ஆக்ஸின் எனப்படும் பயிர் ஊக்கிகள் குறிப்பாக இண்டோல் அசிடிக் அமிலம் உற்பத்தி செய்யப்படுவதற்கு நுண் சத்தான துத்தநாகம் மிகவும் அவசியம் என கண்டுபிடித்துள்ளனர். மண்ணில் துத்தசாக சத்து தேவையான அளவு இருந்தால் மேற்கண்ட பயிர் ஊக்கி உற்பத்தியாகி, காய்கள், பிஞ்சுகள் கொட்டுவதை தடுக்கும் என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

தென்னையில் குரும்பை மற்றும் இளம் காய்கள் கொட்டுவதற்கு பல்வேறு காரணங்கள் இருந்த போதும் அதற்கு முக்கிய காரணம், பயிர் வளர்ச்சி ஊக்கி குறைபாடாகும். இயற்கையில் உண்டாகும் இண்டோல் அசிடிக் அமிலம் மற்றம் ஆக்ஸின் குறைவதால் தான் குரும்பைகள், இளம், காய்கள் கொட்டுகின்றன. எனவே, மண்ணில் தேவையான அளவு துத்தநாகம் இருந்தால் மேற்கண்ட வளர்ச்சி ஊக்கி, குறையாது இருக்கும். இயற்கை எருக்கள் இடுவதின் மூலம், மரத்திற்கு துத்தநாக சத்து கிடைக்கும். அதன் மூலம் பயிர் வளர்ச்சி ஊக்கிகளின் உற்பத்தி துரிதப்பட்டு குரும்பைகள் கொட்டுதல் கட்டுப்படும்.

இயற்கை சார்ந்த முறையில் வேளாண்மை செய்வோர் அனுபவபூர்வாக சில இயற்கை பொருட்களைக் கொண்டு பயிர் ஊக்கிகளை தயாரித்து பயன்படுத்தி வருகின்றனர். இவற்றை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## தென்னை இளநீர்

இளநீர் ஒரு நல்ல பயிர் ஊக்கி. தென்னை இளநீரில் பல தாது உப்புகளுடன் சைட்டோகைனின் என்ற வளர்ச்சி ஊக்கியும் உள்ளது என கண்டுபிடித்துள்ளனர். ஒரு லிட்டர் நீருக்கு 20 மில்லி என்ற அளவில் இளநீரை கலந்து பயிரின் மீது தெளித்தால் நெற் பயிர் நன்றாக தூர் கட்டும். நெல் தூர் கட்டும் போதும், கதிர் வெளிவந்த பிறகும், இதே அளவு தெளித்தால் நெல் மணிகள் நெருக்கமாகவும், திரட்சியாகவும் இருக்கும். நெல்பயிரைப் பொறுத்த வரை தூர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க செய்யவும், நெல்மணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க செய்யவும், இளநீரை தெளிக்கலாம் என தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சிபாரிசு செய்துள்ளனர். இளநீரை 2 சதம் கரைசலாக தெளிக்க வேண்டும். அதாவது 20 மில்லி இளநீர் ஒரு லிட்டர் தண்ணீர் என்ற விகித்தில் கலந்து பயிரின் மீது தெளித்தால் நல்ல பலன் தரும் என ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

மேலும் கடலைப் பிண்ணாக்கு, வேப்பம் பிண்ணாக்கு மற்றும் ஆமணக்கு பிண்ணாக்குகளில் சில பயிர் வளர்ச்சி ஊக்கிகள் உள்ளன. எனவே இது போன்ற பிண்ணாக்குகளை மண்ணில் இடுவதின் மூலம் பயிருக்கு தேவையான சத்துக்கள் கிடைக்கும். பூச்சி, பூசணங்கள், தாக்காதவாறு பயிரை பாதுகாக்கும் வளர்ச்சியும், மகசூலும் அதிகரிக்கும்.

## தேங்காய் மோர் கரைசல்

தேங்காய் மோர் கலந்த கரைசலை ’தேமோர் கரைசல்’ என்பர். இதை தயார் செய்ய நன்கு புளித்த மோர் 5 லிட்டரும், தேங்காய் 10

தேவை. தேங்காய்களை உடைத்து துருவி கொள்ள வேண்டும். துருவலுடன் நீர் சேர்த்து நன்கு ஆட்ட வேண்டும். நீருடன் உடைத்த தேங்காய் நீரையும் சேர்த்து கொள்ளலாம். துருவல் ஆட்டி எடுக்கும் போது 5 லிட்டர் வரை வர வேண்டும். அந்த அளவுக்கு நீர் சேர்க்கலாம். மோரையும், இக்கரைசலை நன்கு கலக்க வேண்டும். 7 நாட்களில் இது நன்கு நொதித்து விடும். பின்பு இதனை வைத்து ஒரு லிட்டர் கலவைக்கு பத்து லிட்டர் நீர் கலந்து தெளிக்கலாம். இலைகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். எல்லாப் பயிர்களுக்கும் தெளிக்கலாம். இதனால் பயிர் நன்கு வளருவதுடன், பூச்சிகளையும் விரட்டுகிறது. அதனால் அதிக மகசூல் பெற வாய்ப்பு உள்ளது. பூ கொட்டுதல், பிஞ்சு உதிர்தல் ஆகியவற்றை கட்டுப் படுத்தும். பூசண நோய்க்கு எதிர்ப்பு சக்தியாகவும் விளங்குகிறது. காய்கறி, எள், பயறு வகை ஆகியவற்றுக்கும் தெளித்தால் அதிக பூக்கள் தோன்றி மகசூல் அதிகரிக்கும்.

### அரப்பு மோர்க்கரைசல்

இதுவும் நல்ல வளர்ச்சி ஊக்கி. இயற்கையாகவே ஜிப்ராலிக் ஆசிட் தயார் செய்து கொள்ளலாம். இரண்டு கிலோ அரப்பு இலை எடுத்து தேவையான நீர் சேர்த்து ஆட்டுக்கல்லில் இட்டு நன்கு ஆட்ட வேண்டும். இப்படி ஆட்டி ஐந்து லிட்டர் கரைசல் எடுக்க வேண்டும். இந்த கரைசலுடன் 5 லிட்டர் நன்கு புளித்த மோரை சேர்த்து கொள்ள வேண்டும். இந்த கரைசலை பானையில் ஒரு வாரம் வைத்திருக்க வேண்டும். பின் இக்கரைசலை பிறகு பத்து லிட்டர் நீரில் ஒரு லிட்டர் மோர் கரைசலை கலந்து வயலில் தெளிக்கலாம். இது நல்ல விளைச்சலை தரும். இது அருமையான வளர்ச்சி ஊக்கியாகவும், பூச்சி விரட்டியாகவும் செயல்பட்டு வருகிறது.

### மீன் அமினோ அமிலம்

ஜப்பான், கொரியா போன்ற நாடுகளில் இதனை பயன்படுத்தி விவசாயிகள் நல்ல மகசூல் பெறுகின்றனர். 1 கிலோ நாட்டு வெல்லம், 1 கிலோ மீன் கழிவுகள் கொண்டு இந்த கரைசலை தயாரிக்கலாம். பிளாஸ்டிக் புட்டி அல்லது கண்ணாடி குவளையில் இவற்றை போட்டு மூடி விட வேண்டும். மூடுவதற்கு முன் நல்ல குச்சியால் இரண்டையும் நன்கு கலக்க செய்ய வேண்டும். நீர் சேர்க்கத் தேவை இல்லை. பின் காற்று புகாதபடி நன்றாக மூட வேண்டும். 22 நாட்களில் நன்கு நொதித்து தேன் பாகு போல் காணப்படும். இதனை வடிகட்டி சாற்றை எடுக்க வேண்டும். இந்த கலவையை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கலாம். இதன் மூலம் நல்ல தழைச்சத்து கிடைக்கிறது. பயிரும் செழித்து வளரும். இதை தயாரிக்க செலவு குறைவு.

### கடல் பாசி திரவம்

கட்டக்கோரை எனப்படும் கடற்பாசியில் உரம் தயாரிக்கலாம். இதில் நுண்ணூட்டச் சத்துக்கள் அதிகம். கடலில் கரைக்கு அருகில் உள்ள பாறைகளிலிருந்து இதை சேகரிக்க முடியும். இதை சேகரித்து விற்பவர்களும் உள்ளனர். இந்த திரவ உரம் தயாரிக்க 10 கிலோ கடற்பாசியை எடுத்து கொண்டு அத்துடன் 10 லிட்டர் நீரை சேர்த்து பிரசர் குக்கரில் இரண்டு மணி நேரம் காய்ச்ச வேண்டும். பின் வடிகட்டி கடற்பாசி திரவத்தை சேகரிக்க வேண்டும். 10 லிட்டர் கடற்பாசி திரவத்தை 100 லிட்டர் தண்ணீரில் கலக்கி இலைகளின் மேல் தெளிக்க வேண்டும். எல்லா பயிர்களுக்கும் தெளிக்கலாம். பயிரின் வளர்ச்சியை பொறுத்து தேவைக்கு ஏற்ப இரண்டு மூன்று முறை தெளிக்க வேண்டும்.

### முட்டை ரசம்

பிளாஸ்டிக் பாத்திரத்தில் பத்து முட்டைகளை குறுகிய முனை கீழிருக்குமாறு வைத்து அவைகள் மூழ்குமளவிற்கு எலுமிச்சை சாற்றினை விட வேண்டும். அதற்குப்பிறகு இருநூறு கிராம் வெல்லத்தை பூரிதக்கரைசலாக நீரில் கலந்து அப்பாத்திரத்தில் ஊற்றி மூடி வைத்துவிடவேண்டும். பத்து நாட்களுக்கு பிறகு திறந்து பார்த்தால் முட்டை கூழ் வடிவில் மாறிவிடும். இதைக் கையால் பிசைந்து மீண்டும் இருநூறு கிராம் வெல்லக்கரைசலை ஊற்றி பத்து நாட்கள் மூடி வைத்துவிட வேண்டும். அதன் திறந்து பார்த்தால் முட்டை ரசம் தயார். பிறகு அதை வடிகட்டி பத்து லிட்டர் டேங்குக்கு இருநூறு மில்லி வீதம் கலந்து தெளிக்கலாம். மிகச்சிறந்த பயிர் வளர்ச்சி ஊக்கியாகும்.

### தசகாவ்யா

இதில் பத்து வகையான பொருட்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 'காவ்யா' என்பது மாட்டினுடைய பொருட்களைக் குறிக்கும். இதில் மாட்டு சாணம், மாட்டு சிறுநீர், மாட்டுப்பால், தயிர் மற்றும் நெய், இவைகள் உள்ளன. இதனை பக்குவமாகக் கலந்து செடிகளுக்கு இட்டால் அதன் வளர்ச்சி அதிகமாக இருக்கும். வெப்பமண்டலப் பகுதிகளில் உள்ள செடிகளுக்கு தசகாவ்யாவை பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அவை வேம்பு (அசாடிரக்ட்டா இன்டிகா), எருக்கம் (கேலோடிராபிஸ்), கௌஞ்சி (டெப்ரோசியா பர்ப்யூரியா), நொச்சி (விட்டெக்ஸ் நெகுண்டோ), உம்மத்தை (டட்டுரா மிட்டல்), காட்டாமணக்கு (ஜட்ரோபா கர்கஸ்), ஆடாதொடா (ஆடாதொடா வேசிகா) மற்றும் புங்கம் (புங்கேமியா பின்னட்டா). இதனை பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு எதிராக செயலாறு இயக்கியாகப் பயன்படுகின்றது.

தாவர வடிசாரை தயாரிக்க தனியாக மாட்டு சிறுநீர் 1:1 விகிதத்தில் (1 கிலோ நறுக்கிய இலைகள் 1 லிட்டர் மாட்டு நீரில்) தழைகளை முக்கி 10 நாட்களுக்கு முக்கி வைக்கவும். வடிகட்டிய அனைத்து வகையான தாவர சாரை ஒவ்வொரு 5 லிட்டர் பஞ்சகாவ்யா கரைசலில் 1 லிட்டர் என்ற அளவில் சேர்க்கவும். இந்தக் கரைசலை 25 நாட்களுக்கு வைத்து நன்றாகக் கலக்கவும்.

**பயன்படுத்தும் முறை**

தசகாவ்யா கரைசலை வடிகட்டவும். இல்லையெனில் தெளிப் பானின் நுனியில் அடைப்பு ஏற்படும். 3 சதம் தழை தெளிப்பானாக பரிந்துரைக்கப்ட்டது. செடியை நடவு செய்வதற்கு முன் 3 சதம் தசகாவ்யா கரைசலில் விதைகள் அல்லது நாற்றுகளின் வேர்களை 20 நிமிடங்கள் முக்கி வைத்தால் விதை வளர்ச்சி மற்றும் வேர் உருவாகுதல் அதிகமாக இருக்கும். அனைத்து காய்கறிகள் மற்றும் தோட்டப்பயிர்கள் வளரும் போது வாரம் ஒரு முறை தெளிக்க வேண்டும்.

**நன்மைகள்**

செடியின் வளர்ச்சி, மகசூல் மற்றும் பயிரின் தரம் அதிகமாகும். அசுவுணி, செடிப்பேன், சிலந்தி மற்றும் இதர உறிஞ்சும் பூச்சி களைக் கட்டுப்படுத்த உதவும். இலைப்புள்ளிகள், இலைக்க கருகல், சாம்பல் நோய் ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்த உதவும்.

மேலும் கடலைப் பிண்ணாக்கு, வேப்பம் பிண்ணாக்கு மற்றும் ஆமணக்கு பிண்ணாக்குகளில் சில பயிர் வளர்ச்சி ஊக்கிகள் உள்ளன எனவும், விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எனவே இது போன்ற பிண்ணாக்குகளை மண்ணில் இடுவதின் மூலம் பயிருக்கு தேவையான சத்துக்கள் கிடைக்கும். பூச்சி, பூஞ்சணங்கள், தாக்காதவாறு பயிரை பாதுகாக்கும் பயிரின் வளர்ச்சியும், மகசூலும் அதிகரிக்கும்.

**மாங்காய்களை பழுக்க வைக்கும் இயற்கை முறை**

ஒரு அட்டை பெட்டியில் யானைத் தழை விராலி தழை, இரண் டையும் 6 அங்குல கனத்திற்கு பரப்பிட வேண்டும். இது ஒரு அடுக்கு இவ்வாறு பரப்பிய தழையின் படுக்கைமேல், மாங்காய்களை பக்கம் பக்கமாக வைத்து, அதனை இந்த இரண்டு தழைகளையும் கொண்டு மூட வேண்டும். அதாவது முதல் அடுக்கு போல் இரண்டாவது அடுக்கு 6 அங்குல கனத்திற்கு, யானை தழை – விராலி தழைக் கொண்டு நிரப்ப வேண்டும். அடுத்து இரண்டாவது அடுக்கின் மீது மாங்காய்களை வைத்து மேற்படி தழைகளை கொண்டு மூடவேண்டும். காய்களின் அளவை பொருத்தும், பெட்டி யின் அளவைப் பொருத்தம் தேவையான அடுக்குகள் தழையை

நிரப்பிவிட்டு பெட்டியை காற்று புகாதவாறு நன்கு மூடி விட வேண்டும். இவ்வாறு செய்வதால் இலைகளில் இருந்து வெளியேறும் எத்திலீன் வாயுவும், மாங்காய் பழக்கும் போது வெளியிடும் எத்திலீன் வாயும் இணைந்து ஒரு வார காலத்தில் அத்தனை காய்களையும் ஒரே சீராக பழுக்க வைத்துவிடும்.

மேற்கூறிய பயிர் வளர்ச்சி ஊக்கிகள் பயிரின் வளர்ச்சியை தூண்டி ஊக்குவிக்கின்றன. பசுமை கூடுகிறது. வளர்ச்சி கூடுகிறது. இலை மொக்குகள், பூ அரும்புகள் மற்றும் பூக்கள் அதிக அளவில் தோன்றும். பூக்கள், பிஞ்சுகள் உதிர்வதை தடுக்கின்றன. விளைப் பொருட்களின் மணம், சுவை மட்டுமில்லாமல் பயிரின் விளைச்சல் பன்மடங்காக அதிகரிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

தகவல் : *முனைவர்கள் செ.தமிழ் செல்வி (பயிர் வினையியல் துறை), செ.சுதாஷா (தாவர நோயியல் துறை), சி.பானுமதி, பேராசிரியர் மற்றும் துறை தலைவர், ப.யோக மீனாட்சி (பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), வி.அ.விஜயசாந்தி (பூச்சியியல் துறை), க.சிவகாமி, சு.ம.சுரேஷ்குமார், ஆ.ப.சீனிவாசப் பெருமாள் (உழவியல் துறை), கோ.குமரேசன் (வேளாண் நுண்ணுயிரியியல் துறை), அ.புனிதா (தோட்டக்கலைத் துறை) மற்றும் இரா.அகிலா (வேளாண் விரிவாக்கத்துறை), நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர், திருவள்ளூர் மாவட்டம் – 602 025.*

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396